# கூட்டாண்மையில் பெற்றோர்



## ஒன்டேரியோ (Ontario) பாடசாலைகளிற்கு ஒரு பெற்றார் ஈடுபாட்டு ஒப்பந்தம்

பெற்றோர் கல்வியில் இன்றியமையாத பங்குதாரர்களாவர். பெற்றோர், அவர்கள் பிள்ளைகளின் கற்றலை குறித்த மனப்பான்மைகளை பாதிப்பதுடன், இல்லத்திலும் கற்றலிற்கு ஆதரிக்கின்றனர். இல்லத்திற்கும் பாடசாலைக்குமிடையே அவர்கள் ஒரு இன்றியமையாத இணைப்பாக அமைகின்றனர். அத்துடன், அவர்கள் பாடசாலை வாழ்க்கையில் ஈடுபாடடையும்பொழுது, அவர்கள் எங்கள் பாடசாலைகளை கற்கவும், வளர்ச்சியடையவும், விருத்தியடைவதற்குமேற்ற அதிசிறந்த இடங்களாக்குவர். பெற்றோர் வரவேற்கப்பட்டு, பங்குதாரர்களாக மதிக்கப்பட்டு, இல்லத்திலும் பாடசாலையிலும் பங்களிப்பதற்கு அவசியமான ஆதரவு அவர்களிற்கு வழங்கப்படும்பொழுது, மாணவ சாதனையும் வெற்றியும் அதிகரிக்கின்றன என்பதை ஒன்டேரியோவின் (Ontario's) புதிய பெற்றார் ஈடுபாட்டு ஒப்பந்தம் அடையாளங்காண்கின்றது.

### பெற்றார் ஈடுபாட்டினை இவ்வொப்பந்தம் எவ்வாறு வரையறுக்கின்றது?

ஒன்டேரியோவின் (Ontario's) பெற்றார் ஈடுபாட்டு ஒப்பந்தம் பெற்றோர் ஈடுபாட்டை பல வித்தியாசமான வடிவங்களில் அடையாளங்காண்பதுடன் அவை ஒவ்வொன்றும் பாடசாலை, மற்றும் மாணவ வெற்றியிற்கு ஒரு முக்கிய உதவுகாரணி என்பதையும் அறிகின்றது. ஒப்பந்தத்தின் வரையறைகளினுள், பெற்றார் ஈடுபாடு பின்வருவனவற்றை உள்ளடக்கின்றது:

- இல்லத்தில் ஒரு நன்மைபயக்கும் கற்றல் சூழலை வழங்குதல்; பிள்ளைகள் பாடசாலையில் கற்பதை ஆதரிக்குமுகமாக அவர்களுடன் செயற்திறனுடன் வேலைசெய்தல், மற்றும் கற்றலை நாளின் ஒரு முக்கிய பகுதியாக செய்தல்
- பாடசாலையிற்கும் இல்லத்திற்குமிடையே தெளிவான தொடர்பாடல் இருக்கும் வண்ணம் ஆசிரியர்களுடன் செயல்விளைவான கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்
- பாடசாலை செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், பாடசாலை நிகழ்ச்சிகள், பயணங்கள் மற்றும் வேறு செயற்பாடுகளில் தொண்டுசெய்ய முன்வருதல்
- பரப்பார்வை வழங்குமுகமாக, பாடசாலை மட்டத்திலே பாடசாலை மன்றங்களில் (School Councils) பங்குபெறுதல், மற்றும் பாடசாலை மன்ற மட்டத்திலே பெற்றார் ஈடுபாட்டு செயற்குழுக்களில் (Parent Involvement Committees) பங்குபெறுதல்.

### நோக்கம்

ஒன்டேரியோவின் (Ontario's) கல்விக் கட்டமைப்பில், அனைத்து பங்குதாரர்களும் மாணவ சாதனையில் பெற்றார் ஈடுபாடு கொண்டுள்ள நன்மைபயக்கும் பாதிப்பை அங்கீகரிக்கின்றனர். மாணவர்கள், உயர்ந்த எதிர்ப்பார்ப்புகளுடைய ஒரு சூழலில் கற்பதற்கு ஆதரிக்கப்பட்டும் ஊக்குவிக்கப்பட்டும் உள்ளார்கள்; இந்த சூழலில், பெற்றோர்:

- அவர்கள் பிள்ளைகளின் கற்றலிலும் விருத்தியிலும் பங்குதாரர்கள் என்ற முறையில், பாடசாலை சமூகத்தால் வரவேற்கப்படுவதுடன், மரியாதையளிக்கப்பட்டும், மதிக்கப்பட்டும் உள்ளார்கள்;
- ஈடுபாடடைவதற்கு வாய்ப்புகளை கொண்டுள்ளதுடன், மாணவ வெற்றியை ஆதரிக்க கல்விசார் சமூகத்தில் எவ்வாறு ஈடுபாடடைவது என்பதைக் குறித்த பல்வகையான தெரிவுகளை கொண்டுள்ளனர்;
- பிற கல்விசார் பங்குதாரர்களுடன் தொடர்ச்சியான தொடர்பாடல் மற்றும் கலந்துரையாடல் மூலம், இல்லத்திலும் பாடசாலையிலும் நன்மைபயக்கும் கற்றல் சூழ்நிலையிற்கு ஆதரவு கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனர்;
- பாடசாலை வாழ்க்கையில் பங்குபெறுவதற்கு தேவையான தகவல்களுடனும் உதவுகருவிகளுடனும் ஆதரிக்கப்படுகின்றனர்.

Tamil

## ஒப்பந்தம் எவ்வாறு பெற்றார் ஈடுபாட்டிற்கு ஆதரவளித்து அதை அதிகரிக்கும்?

பெற்றார் ஈடுபாட்டு ஒப்பந்தமானது, பெற்றோரை பங்குதாரர்களாக ஆதரிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள நான்கு முக்கிய வெற்றி உத்திகளைக் கொண்டுள்ளது; இவற்றின் மூலம், ஒன்டேரியோவின் (Ontario's) மாணவர்களினதும் கல்வி கட்டமைப்பினதும் வெற்றியிற்கு முழுமையாக பங்களிக்கும் நோக்குடன், கல்வி பங்குதாரர்களுடன் ஒன்றுசேர்ந்துழைப்பதற்கான வாய்ப்பு, திறன்கள், மற்றும் கருவிகளை பெற்றோர் கொண்டுள்ளனர் என்பதை உறுதிசெய்கின்றது.

**உத்தி 1:**
பாடசாலை சூழ்நிலை - எல்லா பெற்றார் பரப்பார்வைகளும் ஊக்குவிக்கப்பட்டும், மதிக்கப்பட்டும், செவிமடுக்கப்பட்டுமுள்ள ஒரு நன்மைபயக்கும், வரவேற்கும் சூழ்நிலையை பாடசாலையில் பேணி வளர்த்தல்.

**உத்தி 2:**
தடைகளை அகற்றுதல் - தங்கள் பிள்ளைகளின் கற்றலில் முழுமையாக பங்குபெறுவதற்கு சில பெற்றோரிற்கு தடையாக அமைவனவற்றை அடையாளங்கண்டு அகற்றுதல், அத்துடன் எங்கள் மாணவர்களினதும் சமூகங்களினதும் பன்முகத்தன்மையை பிரதிபலித்தல்.

**உத்தி 3:**
பெற்றோரிற்கு ஆதரவுகள் - இல்லத்திலும் பாடசாலையிலும் மாணவரது கற்றலை ஆதரிப்பதற்கு பெற்றோரிற்கு அவசியப்படும் அறிவு, திறன்கள், மற்றும் கருவிகள் ஆகியவற்றை வழங்குதல்.

**உத்தி 4:**
பெற்றார் உதவிநீடிப்பு - உள்ளூர் பயிலரங்குகள், காட்சியளிப்புகள், கருவிகள் மற்றும் வளங்கள் போன்ற தொடர்பாடல் மற்றும் உதவிநீடிப்பு உத்திகளை மீளாய்வுசெய்து விரிவாக்குதல்; இல்லத்தில் கற்றலையும் பாடசாலைகளில் பெற்றார் ஈடுபாட்டையும் ஆதரிப்பதைக் குறித்த தகவல்களையும் உத்திகளையும் பகிர்வதே இதன் நோக்கமாகும்.

## ஒப்பந்தத்தின் இலக்குகள் எவ்வாறு அடையப்படும்?

கல்வி அமைச்சு, பாடசாலைகள், மற்றும் பிராந்திய பாடசாலை மன்றத்தால் (Ministry of Education, Schools, and District School Boards) மாகாண, பிராந்திய, மற்றும் உள்ளூர் மட்டங்களில் எடுக்கப்படவேண்டிய குறிப்பிட்ட செயற்பாடுகளை இந்த ஒப்பந்தம் அடையாளப்படுத்துகின்றது.

## மாணவர்களும் பெற்றோரும் எவ்வாறு பெற்றார் ஈடுபாட்டினால் பயன்பெறுகின்றனர்?

பெற்றார் ஈடுபாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி, பெற்றார் ஈடுபாட்டிற்கும் கீழ்வருவனவற்றிற்குமிடையே நேரடியான தொடர்புள்ளது என்று எமக்கு கூறுகின்றது:

- விருத்தியடைந்த கல்விசார் சாதனை
- பாடசாலை குறித்த மிக நேர்த்தியான மனப்பாங்கு
- வீட்டுப்பயிற்சியில் கூடிய வெற்றி
- உயர்நிலைப் பாடசாலை பட்டம்பெறும் விகிதங்களில் உயர்வு
- கூடிய நிலைபேறுள்ள பாடசாலை வருகை
- முன்னரை விடக்குறைவான நடத்தைப் பிரச்சினைகள்
- மாணவர்களிற்கு பாடசாலையிலும் பின்தொடரும் வாழ்க்கையிலும் பிரகாசம் கூடிய எதிர்க்காலம்

## ஆசிரியர்கள் எவ்வாறு பயன்பெறுகின்றனர்?

பெற்றோருடன் செயற்திறனாக பங்குபெறும் ஆசிரியர்கள் பெற்றோருடன் மேம்பட்ட உறவுகளையும், பலவாறான பயன்களையும் பெறுகின்றனர்:

- வகுப்பறையில் என்ன நடக்கின்றது என்பதை பெற்றோர் புரிந்துகொள்வதால் பெற்றோர் கூடியளவு ஆதரவாக உள்ளனர்
- வீட்டுப்பயிற்சியும் செயற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிபடுத்த பெற்றோர் உதவுகின்றனர்
- மாணவ வெற்றியிற்கான பொறுப்பை பெற்றோர் பகிர்வதுடன் ஆசிரியருடன் சேர்ந்துழைக்கின்றனர்
- ஆசிரியர்களையும் பாடசாலையையும்பற்றி பெற்றோர் மிக நேர்த்தியான எண்ணக்கருத்தைக் கொண்டுள்ளனர்
- மாணவ வருகையும் வகுப்பறை நடத்தையும் விருத்தியடைகின்றன
- மாணவ சாதனை விருத்தியடைகின்றது
- ஆசிரியர்கள் பெற்றோருடன் பலங்கூடிய தொடர்பை கொண்டுள்ளனர், பெற்றோரால் ஆதரிக்கப்படுவதாக உணர்கின்றனர், அத்துடன் கூடிய தொழில் திருப்தியைக் கொண்டுள்ளனர்.

## பாடசாலைகள் எவ்வாறு பயன்பெறுகின்றன?

பாடசாலைகள் அவர்களைச் சூழ்ந்துள்ள சமூகங்களுடன் இணைந்துள்ளன. பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் தேவையான சேவைகளை வழங்கவும், புதுவிதமான பாடசாலை-சமூக திட்டங்களை உருவாக்கவும், பாடசாலை வாழ்க்கையை செழிப்பாக்கவும், பெற்றோர், சமூக அங்கத்தவர்கள், மற்றும் பாடசாலைகள் என்பன ஒன்றிணைந்து ஒரு பலம்வாய்ந்த ஆதரவு பிணையத்தை உருவாக்கலாம். இதன் விளைவாக:

- குடும்பங்களும் சமூக ஸ்தாபனங்களும் கூடியளவாக பாடசாலைக்கு ஆதரவளிக்கின்றன
- முழு-பாடசாலை மற்றும் தனிப்பட்ட மாணவ சாதனை கூடிய சமயங்களில் முன்னேற்றமடைகின்றன
- சமூகத்திலுள்ள வணிக ஸ்தாபனங்கள், முகமையகங்கள், மற்றும் சேவைகளுடன் பாடசாலைகள் இணைக்கப்படுகின்றன
- அவற்றின் சாதனைகளிற்கும் சமூக வாழ்வில் ஒரு முக்கிய பாகமாக அவற்றின் அளப்பரிய பங்கிற்கும் பாடசாலைகள் கூடியளவு அங்கீகாரத்தைப் பெறுகின்றன.

## கல்வி கட்டமைப்பு எவ்வாறு பயன்பெறுகின்றது?

கல்வி அமைச்சு, பாடசாலைகள், மற்றும் பிராந்திய பாடசாலை மன்றமானது (Ministry of Education, Schools, and District School Boards), பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலையில் வெற்றியெய்துவதற்கு செய்யும் முக்கிய பணியின் மூலம் பயன்பெறுவது மட்டுமல்லாமல், மாகாண, பிராந்திய, மற்றும் உள்ளூர் மட்டங்களில் ஒப்பந்தங்களையும் திட்டங்களையும் உருவாக்கும்பொழுது பெற்றார் பரப்பார்வைகள் செவிமடுக்கப்பட்டு கருதப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதன் மூலமும் பயன்பெறுகின்றது.

## நாம் அனைவரும் பயன்பெறுகின்றோம்

ஒன்றிணைந்து, நாம் எமது பிள்ளைகளுக்கான சாத்தியங்களை கட்டமைத்து, அச்சாத்தியங்களை யதார்த்தங்களாக மாற்றியமைக்கின்றோம்.

மேலும் அறிவதற்கு: **www.ontario.ca/EDUparents** ஐச் சந்தியுங்கள்

© Queen's Printer for Ontario, 2010 ISBN 978-1-4435-4765-9 (Print) 978-1-4435-4766-6 (PDF)